பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 22 (8—11—71) திங்கள் வெளியூர்: ஐப்பசி 23 (9—11—71) செவ்வாய் [இதழ்: 121

## அகதிகள் எண்ணிக்கை 96 இலட்சமாகியது

★

பெங்களூர், நவ. 8—உயிருக்குப் பயந்து வங்க தேசத்திலிருந்து ஓடிவந்த அகதிகளின் எண்ணிக்கை 96 இலட்சமாக உயர்ந்துவிட்டது.

மேலும், நாள்தோறும் சராசரியாக 40,000 அகதிகள் இந்திய எல்லைக்குள் நுழைந்தவண்ணம் உள்ளனர்.

இத்தகவலை, மத்திய உள்துறைத் துணையமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்.

# ‘இதயங்களின் வாழ்த்துக்களுடன் சென்று வருகிறேன்’

## ‘எல்லாத் துறைகளிலும் அமைதி திகழ ஒத்துழைப்புத் தாருங்கள்’

### தமிழக மக்களுக்கு கலைஞர் உருக்கமிகு வேண்டுகோள்



சென்னை, நவ. 8—

“என்னை ஆளாக்கிய அறிஞர் அண்ணா வகுத்த அறவழியில்—அன்பு நெறியில், தமிழர்கள் அனைவரும் பண்பாடு போற்றி—நாட்டுப் பாதுகாப்புக்கான சூளுரை மேற்கொண்டு—எல்லாத் துறைகளிலும் அமைதி திகழ ஒத்துழைப்புத் தருமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

“இடையில் இருப்பது பல ஆயிரம் மைல்கள் எனினும், அது நாட்டுக்கு நாடு உள்ள தூரமே தவிர, இதயத்துக்கும் இதயத்துக்கும் இடையே உள்ள தொலைவு அல்ல; உங்களையே எண்ணியவாறு இந்தப் பயணத்தை நடத்துவேன்; நீங்கள் எனக்குத் துணையாக இருப்பீர்கள்’ என்று திடசித்தத்துடன் சென்று வருகிறேன்”

—இவ்வாறு, முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமது அமெரிக்கப் பயணத்தைத் தொடங்கு முன் வெளியிட்ட அறிக்கையில் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அறிக்கையில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:—

“அன்புள்ளவர்களே! அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று மூன்று கிழமைகள் அந்த நாட்டில் சுற்றுப்பயணம் நடத்திட உங்கள் இதய வாழ்த்துக்களுடன் புறப்படுகிறேன்.

வளமிக்க அந்த நாட்டின் கவர்ச்சிமிக்க காட்சிகள் ஒவ்வொன்றும் நமது தாயகத்தையும், அதுபோல செழிப்புக் கொழிக்கும் பூமியாக ஆக்கிட வேண்டும் என்ற ஆர்வத்தைத்தான் என்னிடம் ஏற்படுத்தும் என்பதை அறிவீர்கள்.

அமெரிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொழில் வளம்—வேளாண்மைச் சிறப்பு—அறிவுத் திறன் வளர்க்கும் கல்விச் சாதனங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து கருத்துச் செல்வம் பெற்றிடவும், அந்த நாட்டின் அரசியல் தலைவர்களைக் கண்டு உரையாடிடவும், இந்திய நாட்டின் இனிய பண்பாடுகளை விளக்கிடவும், உலக மக்களிடையே இந்தியா கொண்டுள்ள மனிதாபிமான நட்புணர்வினைத் தெளிவாக்கிடவும், தமிழ்நாட்டின்—தமிழ் மக்களின் குரலை உலக அமைதி அடிப்படையில் ஒலித்திடவும் இந்தப் பயணத்தை நான் மேற்கொண்டுள்ளேன்.

இப்பயணத்திற்கிடையே இரண்டொரு நாட்கள் என் இடது கண்ணில், கார் விபத்தினால் ஏற்பட்ட தொல்லைக்கும் அந்த நாட்டுக் கண் மருத்துவ நிபுணர்களிடம் சிகிச்சை பெற எண்ணியுள்ளேன்.

அனைத்துக்கும் உங்கள் வாழ்த்துக்கள் எனக்குத் துணைபுரியும் என நம்புகிறேன்.

நான் தமிழ்நாட்டில் இல்லாத சில வாரங்களில், கட்சிச் சார்பற்ற முறையில் தமிழகத்தில் அரசியல் பண்பாட்டைக் காத்து—அமைதி நிலவிட அனைவரும் உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”

### நிருபர்களிடையே:

**இன்று காலை, செய்தி நிருபர்கள், முதல்வரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது, ‘செய்தியாளர்களுக்கு என் அன்பு’ என்றார்; உடன், செய்தியாளர்கள், ‘சென்று வருக—வென்று வருக’ என்று கூறினர்.**

**செய்தியாளர்கள் மாலையணிவித்தும், கனிகள் வழங்கியும், கை குலுக்கியும் தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொண்டனர்.**

நிருபர்கள் கேட்ட கேள்விகட்கு முதல்வர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

“மூன்று வாரங்கள் சுற்றுப் பயணம் செய்யத் தற்போது திட்டமிட்டிருக்கிறேன்; எனினும், நான் அமெரிக்கா சென்ற பிறகு நிலைமைக்கு ஏற்ப சுற்றுப்பயணத் திட்டம் மாறுதலுக்குள்ளாகலாம்.

“இங்கு ஏதேனும் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக நாடு திரும்ப நேரிடும்; இல்லையேல், சில நாட்கள் கூடுதலாகப் பயணம் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

“முதலில் வகுத்த சுற்றுப் பயணத் திட்டத்தை மாற்றி, நாட்களைக் குறைத்து 3 வாரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறேன்.

“அமெரிக்காவில் அன்பளிப்பாக வழங்குவதற்காக, நான் எழுதிய சிலப்பதிகாரம் மற்றும் எனது கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகிய நூல்களை எடுத்துச் செல்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலக் காட்சியின் திரைப்படமும் எடுத்துச் செல்கிறேன்.”

# ‘எங்கு சென்றாலும் என் இதயம் தமிழகத்தில்தான் இருக்கும்’

## ‘நாட்டின் பாதுகாப்புக்கு உரிய எல்லா உதவிகளையும் செய்வீர்கள் என நம்புகிறேன்’

### அமெரிக்கா செல்லுமுன் தமிழக மக்களிடம் கலைஞர் விடை பெற்றார்

சென்னை, நவ. 8—

அமெரிக்காவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சென்னையிலிருந்து இன்று மாலை 6.35 மணியளவில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும் கழகத் தலைவர்—முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நேற்று நடைபெற்ற மூன்று விழாக்களிலும் விடை பெற்றுக்கொண்டார்.

**கலைஞர் அவர்கள் வெளிநாடு செல்வது, இது இரண்டாவது தடவையாகும். கடந்த ஆண்டு அவர், இங்கிலாந்து—மேற்கு ஜெர்மனி—இத்தாலி—சுவிட்சர்லாந்து—பிரான்சு—நெதர்லாந்து ஆகிய நாடுகளில் 20 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார்.**

மூன்று வார காலம் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்யவிருக்கும் அவர், சென்னையில் நேற்று நடைபெற்ற விழாக்களில் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்வதைக் குறிப்பிட்டு, ‘சென்று வருகிறேன்’ என்று கூறி விடை பெற்றார்.

### இராஜாஜி மண்டபத்தில்!

நேற்று காலை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விற்பனை வாரியக் குழுவின் சார்பில், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதியளிக்கும் விழா நடைபெற்றது; அவ்விழாவில், கலைஞருக்கு வழியனுப்பு வாழ்த்துக் கூறினர்; அதுபோது அவர் உருக்கத்துடன் கூறியதாவது:—

“இந்த விழாவில், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதியும் கொடுத்து—வெளிநாடு செல்லும் என்னை, ‘வெளிநாடு சென்று நலமுடனும்—புகழுடனும் திரும்ப வேண்டும்’ என்று வாழ்த்தியிருக்கிறீர்கள்.

**“தனித்தனியாக யாரையும் சந்தித்து நான் விடை பெறப் போவதில்லை; நான் எங்கு சென்றாலும்—எந்த இடத்தில் இருந்தாலும், என் இதயம் தமிழ்நாட்டின் பக்கம்தான் இருக்கிறது—என் இதயம்—உங்கள் இதயத்தோடுதான் இருக்கிறது என்று சொல்லி விடை பெறுகிறேன்.**

### கலைவாணர் அரங்கில்:

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று மாலை நடைபெற்ற சிறந்த திரைப்படங்களுக்கும், நடிகர்—நடிகையர்களுக்கும் பரிசளிக்கும் விழாவில் கலைஞர் கருணாநிதி அவர்கள், அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்வதைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் கூறியதாவது:—

“நான் வெளிநாடு செல்வதற்கு முன்தினம், இந்த விழா வைக்கப்பட்டிருக்கிறது; கலைஞர்களிடமும் நான் விடை பெற்றுச் செல்லவேண்டும் என்பதற்காக அவர்களைக் கூட்டிவைத்து—அவர்களிடம் விடைபெறும் விழாவாக இதனை ஏற்பாடு செய்திருக்கிறேன்” என்று கூறி விடை [illegible]

### அண்ணா சதுக்கத்தில்:

நேற்று இரவு சென்னை கடற்

(4-ம் பக்கம் பார்க்க)

# வான [illegible]வெளியில் பிரி[illegible]டனின் செயற்கைக் கோள்

இலண்டன், நவ. 4—

செயற்கைக் கோள் நாடுகள் வரிசையில் இடம் பெற்றுவிட்ட பிரிட்டன் சென்ற வாரம் செலுத்திய 'எக்ஸ்-3' என்ற செயற்கை கோள் செம்மையாக இயங்குகிறது; திட்டமிட்ட தூரம்வரை வானத்தில் சென்று -- பிறகு பூமியைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது; திட்டமிட்டபடியே எல்லா இயக்கங்களும் செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பூமியிலிருந்து 350 மைல்களுக்கு உட்பட்ட உயரத்தில்தான் இந்தச் செயற்கைக் கோள் சுற்றிக்கொண்டிருக்கிறது என்பதால், இதனைச் சக்தி வாய்ந்த பைனாகுலர் மூலம்கூட பார்க்க முடியும்; ஒரு முறை பூமியைச் சுற்றிவர இது 109 நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறது.

ஓராண்டுக் காலம் 'உயிரோடு' இயங்கக்கூடிய இந்தச் செயற்கைக் கோள், வானவெளியில் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு மேல் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்.

நான்காண்டு ஆய்வுக்குப் பிறகு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இந்தச் செயற்கைக் கோளைக் கட்டி முடித்துள்ளனர்; இதற்கு 2 மில்லியன பவுன்கள் (ரூ. 3.60 கோடி) செலவாயிற்று.

145 இராத்தல் எடையுள்ள இதன் குறுக்களவு 43 அங்குலம்.

குறைந்தது ஓராண்டுக் காலம் இந்த செயற்கைக் கோள் வானில் சுற்றி மிக முக்கியமான பல தொழில் நுட்பச் சோதனைகளைச் செய்யப்போகிறது.

இலண்டனுக்கு மேலாக இது ஒவ்வொரு முறை சுற்றும்போதும் இங்குள்ள தரை நிலயத்துடன் தொடர்பு ஏற்படுகிறது; தகவல்களை அனுப்புகிறது; அவை இங்கு உடனுக்குடன் கம்பியூட்டரில் பதிவு செய்யப்பட்டுவிடுகின்றன.

முதல் செயற்கைக் கோளின் வெற்றிகரமான இயக்கத்தைக் தொடர்ந்து, அடுத்து ஒரு 'எக்ஸ்-4' செயற்கைக் கோள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது; சற்றே பெரிதான இது கட்டி முடிக்க 3 மில்லியன் பவுன்கள் (ரூ 5.40 கோடி) செலவு ஆகும்; 1974-ஆம் ஆண்டுக்குள் இது செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கடற் பாசியிலிருந்து சத்துணவு

### அயர்லாந்து நிறுவனம் தயாரிப்பு

இலண்டன், நவ. 4—

கடற் பாசியைச் சேகரித்துப் பதப்படுத்தி --- தூளாக்கி --- உணவுப் பொருள்களின்மேல் உப்புத் தூளைப்போல் போட்டுச் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்ல ஊட்டம் தரக்கூடியது என்று அயர்லாந்து நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

"சிறந்த சத்தணவாகப் பயன்படுவதுடன் நல்ல எருவாகவும் இதனைப் பயன்படுத்தலாம்; சத்துணவுத் தூள் தயாரிப்பில் சேதமடையும் கடற் பாசியை எருவாகப் பயன்படுத்தினால் பயிர்கள் குறைந்தது இருமடங்கு வளர்ச்சியும், பலனும் தருகின்றன" என்றும் அந்நிறுவனம் கூறுகிறது.

கடற்பாசி அப்படியே ஒரு சிறந்த வைட்டமின்; சத்துணவுத் தட்டுப்பாடு இருக்கும் இக்காலத்தில், இயற்கையாகக் கிடைக்கும் சத்துணவைப் பயன்படுத்த அயர்லாந்து நிறுவனம் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறது. கடற்பாசியைப் பெரும் அளவில் சேகரித்து -- இயந்திரங்கள்மூலம் உலர வைத்துத் தூள் செய்கிறார்கள்.

இப்படித் தயாரிக்கப்படும் சத்துணவு ஏற்கனவே ஐரோப்பாவில் பிரபலமாகியிருக்கிறது. இதை அறிந்ததும் இந்தியாவும், ஆப்பிரிக்காவும் இதில் அக்கறை காட்டி-- கடற்பாசி வளர்க்க முடிவு செய்துள்ளன.

இந்த அயர்லாந்து நிறுவனம் சென்ற ஆண்டில் மட்டும் 10 இலட்சம் பவுன்களுக்கும் மேல் மதிப்புள்ள கடற்பாசித் தூள் விற்பனை செய்திருக்கிறது.

# வேளாண்மைக் கழகம் துவக்கம்-- ஆராய்ச்சித் திட்டக் கொள்கைகளை வகுக்கும் அமைப்பாக இயங்கும்

சென்னை, நவ. 8—

"வேளாண்மைத் துறையின்கீழ் செயல்படும் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களிலும் -- அமைப்புக்களிலும் நடைபெறும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வகுக்கவும் -- ஒருங்கிணைக்கவும் 'தமிழ்நாடு வேளாண்மைக் கழகம்' அமைப்பது அவசியமிறது; இனி ஆராய்ச்சித் திட்டங்கள் -- விரிவமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை வகிப்பது சம்பந்தமான கொள்கைகளை முடிவு செய்யும் உயர்தர அமைப்பாகத் தமிழ்நாடு வேளாண்மைக் கழகம் பணியாற்றும்; மாவட்ட வேளாண்மைக் கழகங்கள் அதற்கு உதவியாகச் செயல்படும்"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைக் கழகத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவுகள் -- கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டியது அவசியமாகும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

## ஏக்கருக்கு ரூ. 300 வருவாய் தரும் பயறு வகை

### தமிழ்நாட்டில் 23 இலட்சம் ஏக்கரில் பயிரிடத் திட்டம்

### அன்பில் தர்மலிங்கம் தகவல்

நெல்லை, நவ. 6—

"தமிழ்நாட்டில் 23 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகள் பயிரிடத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது; இத்திட்டத்துக்கு சுமார் ரூ. 1 கோடி செலவாகும்"

என்று வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தெரிவித்தார்.

"இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அண்மையில் வெளியிட்ட புது ரகம் பச்சைப் பயறு தமிழ்நாட்டில் முதல் முளை விட்டுள்ளது; இதன் பெயர் 'பூசா பைசாகி மூக்' என்பதாகும்; 75 நாள் பயிராகும் இது; மற்ற பயிர்களுடன் கலந்து சாகுபடி செய்யக்கூடியது; இதனால் விவசாயிக்குக் கூடுதலாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 கிடைக்கும்"

என்று வேளாண்மைத் துறை அதிகாரி கூறினார்.

கோவை மாவட்டத்தில் பருத்திப் பயிருடன் புதுரகப் பயறு பரீட்சார்த்தமாக கலந்து விதைக்கப்பட்டது; இதன் பலன் ஊக்கமூட்டுவதாக உள்ளது.

மாநில விதைப் பண்ணையில் 120 ஏக்கரில் புது ரகப் பயறு விதைகள் உற்பத்தி முன்னேறி வருகிறது; 40 டன் விதை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதம் பயறு ஏக்கர் ஒன்றுக்கு 500 கிலோ காண்கிறது; பருத்தி -- வேர்க்கடலைப் பயருடன் கூடவே சாகுபடி செய்து கொள்ளலாம்; இதற்கென்று தனி முயற்சி எடுக்காமலே பயறு விளைந்துவிடும்; அதுமட்டுமல்ல -- பயறுச் செடி, நிலத்தக்குத் தகுந்த பசுந்தாள் உரமாகவும் இருக்கும்.

இவ்வாண்டில் ரூ. 10.60 இலட்சம் தீவிர பயறு சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்படும்; 500 டன் அளவுக்கு விதைகள் -- சிறப்பு விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

தமிழ்நாட்டில் பயறு தேவை 7 இலட்சம டன்; இப்போது 1.24 இலட்சம் டன்தான் உற்பத்தியாகிறது.

கலப்புப் பயிராகவும், நெல் -- கரும்பு -- மஞ்சள் வயல்களில் வரப்புப் பயிராகவும், மற்றும் இரண்டாவது அல்லது மூனருவது போகம் சாகுபடியாகவும் பயறு வகைகள் பயிர் செய்யப்படும்.

குடுமியான்மலை அண்ணா விதைப் பண்ணையிலுள்ள கருணாநிதி ஆராய்ச்சிக் கழகத்தில், குறுகிய கால பயறு சாகுபடி சோதனை முறையில் மேற்கொள்ளப்படும்.

### பருப்பு வகைகள் சாகுபடி -- தீவிர கவனம் அவசியம்

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் சுமார் 23 இலட்சம் ஏக்கர்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

உயர் விளைச்சல் நெல் ரகங்களை அறிமுகம் செய்வதிலும் தமிழ்நாடு வெற்றி பெற்றிருக்கிறது; ஆனால், பருப்பு வகைகள் சாகுபடியில் முன்னேற்றம் காண இயலவில்லை; ஆராய்ச்சி நிலையங்கள் இத்துறையில் தீவிர கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### புதிய வகைகள் சாகுபடி

ஒரு புதிய ரக சூரியகாந்திப் பூ (உணவுக்குப் பயன்படும் எண்ணெய் அதிலிருந்து தயாரிக்கப்படுகிறது)—பருத்தி — ஓசூரில் வர்ஜினியா புகையிலை—தாமபுரியில் உருளைக் கிழங்கு ஆகியவற்றைச் சாகுபடி செய்வதற்கான ஏற்பாட்டை அரசு பரிசீலனை செய்துவருகிறது."

## கல்கத்தாவில் முத்து ராமலிங்கனார் பிறந்த நாள் விழா

கல்கத்தாவில் இயங்கிவரும் அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தின் சார்பில், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவரின் 64-வது பிறந்த நாள் விழாவும் -- சங்கம் கல்கத்தாவில் நடத்திவரும் அறிஞர் அண்ணா — நேதாஜி முத்து ராமலிங்கத் தேவர் தமிழ் இலவசப் பள்ளியின் முதலாவது ஆண்டு விழாவும் 30—11—71-ல் கொண்டாடப்பட்டது; விழா, சங்கப் பணிமனையில், காலை 10-மணிக்குத் துவங்கி மாலை 4-மணிவரை நடைபெற்றது.

சங்கத் தலைவர் திருப்பத்தூர் செ. வீரபத்திரன் விழாவிற்குத் தலைமைவகித்து அனைவரையும் வரவேற்று உரையாற்றினர்.

கல்கத்தாவில் இயங்கிவரும் தென்னிந்திய இலக்கிய -- கலாச்சார -- கலை அமைப்புகளின் பிரதிநிதிகள் விழாவில் பங்குகொண்டு 'தேவர்' உருவப் படத்திற்கு அவர்கள் சார்ந்துள்ள அமைப்புகளின் சார்பில் மாலை அணிவித்து உரையாற்றினர்.

பள்ளிச் சிறுர்களின் இசை -- நாட்டிய -- நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவுக்கு வருகைதந்த அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

விழாவின்போது இலவசமாக வழங்க நேதாஜி -- தேவர் போட்டோ போஸ்டர் 1,500-ஐ, சென்னை அழகும் பொருள்கள் சங்கச் செயலாளர் எஸ். கே. பழனிச்சாமித் தேவர் நன்கொடையாக அனுப்பி வைத்திருந்தார்; அதனை, விழாவிற்கு வருகைதந்த ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கினர்.

சங்கச் செயலாளர் நி. மாறன் நன்றி கூறினர்

# தூத்துக்குடித் திட்டம் நிறைவேறுவதில் தாமதம்

## 1973-க்குள் முடிந்துவிடும் என்கிறார் மத்திய அமைச்சர்

### புகார்கள் பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசுவதாக உறுதிமொழி

தூத்துக்குடி, நவ. 6—

'தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை, 1972-ஆம் ஆண்டுக்குள் முடித்துவிட வேண்டும் என்று முன்பு திட்டமிடப்பட்டது; ஆனால், இதில் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது; 1973-ம் ஆண்டுக்குள் --துறைமுகத் திட்டம் முடிந்துவிடும்"

என்று மத்திய அரசு கப்பல்-- போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜபகதூர் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் தூத்துக்குடியில், கடலோரப் பகுதியில் ஆழம் கிடையாது; இதனால், கப்பல்கள் கரைக்கு வர இயலாது; இப்போதுள்ள துறைமுகத்துக்கு 5 மைல் தூரத்திலேயே கப்பல்கள் நின்றுவிடும்.

தோணிகள் -- படகுகள் மூலமாகத்தான் கப்பலிலுள்ள சரக்குகளைக் கரைக்கு கொண்டுவருவார்கள்; சரக்குகளை ஏற்றவும், இதே முறைதான் கையாளப்படுகிறது.

இந்தக் குறையைப் போக்க, கரையிலிருந்து 4 மைல் தூரத்தில் உள்ள 'முயல் தீவு' என்ற பகுதியைப் புதிய துறைமுகமாக மாற்றத் திட்டமிடப்பட்டது; (இது தீவு என்று அழைக்கப்பட்டாலும், பூமியுடன் இணைந்த பகுதிதான்).

இந்தப் பகுதியில் கரடு முரடாக கிடந்த நிலம் பண்படுத்தப்பட்டது; அகலமான சாலைகள் போடப்பட்டன; சரக்கு இரயில் போய்வரப் புதிய இரயில் பாதையும் அமைக்கப்பட்டது.

கப்பல்கள் கரை அருகில் வந்து நிற்பதற்கு வசதியாக கடல் ஆழப்படுத்தப்பட்டது; சிறிது தூரத்துக்குக் கடலில சாலை போடப்பட்டது; தொடர்ந்து, துறைமுகம் அமைக்கும் வேலை தீவிரமாக நடந்து வருகிறது.

கடற் சாலையைப் பயன்படுத்தும் வேலை இப்போது நடக்கிறது; இதைத் தொடங்கி வைத்து மத்திய அமைச்சர் ராஜபகதூர் பேசியதாவது:—

"துறைமுகத் திட்ட வேலை போதிய அளவு வேகமாக நடைபெறவில்லை; 'ஊழியர்களுக்குக் காலாகாலத்தில் சம்பளம் கொடுக்கப்படவில்லை' என்று பல புகார்கள் கூறப்படுகின்றன; இதுபற்றித் திட்டத் தலைமை அதிகாரி -- துறைமுக அதிகாரி --- காண்டிராக்டர்கள் ஆகியோருடன் கலந்து பேசுகிறேன்.

தூத்துக்குடியிலிருந்து ஆண்டுக்கு 12 இலட்சம் டன் உப்பு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டது; ஆனால், இப்போது 5 இலட்சம் டன உப்புதான் உற்பத்தி செய்யப்படுகிறது; மேற்கொண்டு 25,000 ஏக்கர் நிலத்தில் (உப்பளங்களில்) உப்பு விளைவித்தால்தான் திட்டமிட்டபடி உப்பு ஏற்றுமதி செய்ய முடியும்; இதுபற்றி மாநில அரசும்--மத்திய அரசும் கலந்துபேச வேண்டும்."

### எஸ். ஜே. சாதிக்பாட்சா

விழாவில், தமிழக பொதுப் பணி அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா பேசுகையில், 'உப்பு உற்பத்தியைப் பெருக்குவது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது' என்று தெரிவித்தார்.

"தூத்துக்குடியில், அனல் மின்சாரம் தயாரிக்கும் நிலையம் -- உரத் தொழிற்சாலை -- சோடா உப்புத் தொழிற்சாலை போன்றவை அமைக்கும் வேலை முடிந்ததும், இது, தொழில் நகரமாக மாறிவிடும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# திட்டமிட்டபடி சேலம் இரும்பாலை

## 1977-க்குள் அமைந்தே தீரும்

### உருக்கு அமைச்சர் குமாரமங்கலம் உறுதி- ஐயத்தைப் போக்கும் வகையில் விளக்கம்

சென்னை, நவ. 6—

"சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் முடிவில் எந்த வித மாற்றமும் இல்லை; அங்கு கண்டிப்பாக இரும்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டேதீரும்.

"சேலம் கஞ்சமலையில் கிடைக்கும் இரும்பு, 'தரத்தில் சிறந்தது' என்று நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஆகவே, அதைப் பயன்படுத்துவதில், எந்தவிதச் சிக்கலும் இல்லை"

என்று ம[illegible]திய அரசின் உருக்குத் துறை அமைச்சர் மோகன் குமாரமங்க[illegible]ம், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இது தொடர்பாக மேலு[illegible] அவர் கூறியதாவது:—

"கஞ்சமலை[illegible] இரும்பை உருக்குவதற்குத் [illegible]தேவைப்படும் எரிபொருளா[illegible]தைப் பயன்படுத்துவது [illegible]து பற்றித்தான் அரசு சிந்தித்து வருகிறது.

நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தினால் தயாரிப்புச் செலவு அதிகமாகக்கூடுமோ என்ற எண்ணம் இருக்கிறது; அதற்குப் பதிலாக, சிங்கரேணியில் கிடைக்கும் சுட்ட கரியை எரிபொருளாகப் பயன்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம்.

எந்த விதத்திலும் தயாரிப்புச் செலவு கூடுதலாக ஆகிவிடக் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கையாகும்; இது குறித்து, நிபுணர் குழுவான 'தஸ்தூர் குழு'வின் அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது; இந்த அறிக்கை இம்மாத முடிவுக்குள் அரசுக்குக் கிடைத்துவிடும்; அதைப் பரிசீலித்த பிறகு, எப்படிப்பட்ட இரும்பு தயாரிப்பது என்பது பற்றித் தமிழக அரசுடன் கலந்து பேசுவோம்.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான பெரும் பகுதி இயந்திரங்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களாக இருக்கும்.

திட்டமிட்டபடி, 1977-ம் ஆண்டுக்குள், சேலம் இரும்புத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுவிடும்; இதில் எந்தவித மாறுதலும் இல்லை."

## ஆக்கிரமிப்பு முயற்சியில் பாகிஸ்தான்

### 20 ஆண்டுக் கால நிகழ்ச்சிகளின் பட்டியல்

1947 முதல் 1971 வரை பாகிஸ்தான் இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட நிகழ்ச்சிகளின் பட்டியல் வருமாறு:—

1947 அக்டோபர்:—பாகிஸ்தானைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய பழங்குடியினர் சிலர், பாகிஸ்தான் இராணுவத்தின் தூண்டுதலின் பேரில், ஜம்மு -- காஷ்மீர் மாநிலத்துக்குள ஊடுருவித் தாக்குதல் நடத்தினர்.

1948 மே:—பாகிஸ்தான் இராணுவத்தின் மூன்று பிரிகேடுகள், காஷ்மீரத்தில் நிலை கொண்டிருக்கின்றன என்பதை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.

1956 சனவரி:—பாகிஸ்தான் படைகள் கட்ச் பகுதியின் வடக்கிலுள்ள சாட்பெட் என்னுமிடத்தில் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டன. 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ஆம் தேதியன்று இந்தியப் படைகள் அப்பகுதிக்குள் நுழைந்தவுடன் பாகிஸ்தான் படைகள் அங்கிருந்து விலகிக் கொண்டன.

1965 சனவரி:— கஞ்ஜார்கோட், சட்ச் ஆகிய பகுதிகளைப் பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டது.

1965 ஏப்ரல் 9:—கட்ச் பகுதியில், சர்தார் என்ற இந்தியக் காவல் நிலையம்மீது பாகிஸ்தான் (ஒரு காலாட்படை பிரிகேட் -- டாங்கிகள் -- கனரகப் பீரங்கிகள் உதவியுடன்) முழு அளவில் இரகசியத் தாக்குதலுக்குத் தயாராக இருந்தது.

1965 ஜுன் 30:—1-1-1965 அன்று இரு தரப்புப் படைகளும இருந்த இடத்துக்குத் திருப்பிச் செல்லுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது

1968 சனவரி 19:—இந்த ஒப்பந்தத்தின்படி அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர் சர்வதேச விசாரணைக் குழு, தனது தீர்ப்பில் சிந்து--கட்ச் எல்லை, 24-வது இணைக் கோட்டின்மீது அமைந்திருக்கிறது என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை ஒருமனதாக நிராகரித்துவிட்டது.

1965 ஆகஸ்டு 5:— ஜம்மு--காஷ்மீர் மாநிலத்தில் நாச வேலைகளை நடத்தவும், கொலை -- கொள்ளை புரியும் நோக்கத்துடனும், ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் சாதாரண உடையணிந்து, போர் நிறுத்த எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்தனர்.

1965 செப்டம்பர் 1:—பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த ஓர் முழு பிரிகேடும் -- 70 டாங்கிகளும் சர்வதேச எல்லையைக் கடந்து, சாம்ப்--ஜௌரியன் பகுதிக்கு அருகில் இந்தியாவுக்குள் நுழைந்தன; இதைத் தொடர்ந்து மேற்குப் பாகிஸ்தானின் எல்லைக்கு அருகிலுள்ள இந்தியப் பகுதிகள்மீது பாகிஸ்தான் பெருமளவில் தாக்குதல் தொடுத்தது.

1971 சனவரி 30:—ஸ்ரீநகரிலிருந்து ஜம்முவுக்குச் சென்று கொண்டிருந்த இந்தியப் பயணிகள் விமானத்தை, இரண்டு பாகிஸ்தான் ஏஜெண்டுகள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி -- லாகூருக்குக் கடத்திச் சென்றார்கள்.

1971 பிப்ரவரி 2:—கடத்தப்பட்ட இந்திய விமானம் கொளுத்தப்படமாட்டாது என்று பாகிஸ்தான் அரசு உறுதி கூறியிருப்பினும், போலீசார் -- விமானநிலைய அதிகாரிகள் -- இராணுவத்தினர் ஆகியோரின் முன்னிலையில் இந்திய விமானம் கொளுத்தப்பட்டது; இந்தச் சம்பவத்தை அதிகாரபூர்வமாகப் பாகிஸ்தான் டெலிவிஷன் ஒலிபரப்புச் செய்தது.

1971 ஆகஸ்டு -- செப்டம்பர் -- அக்டோபர்:—அசாம், திரிபுரா எல்லையிலுள்ள இந்தியக் காவல் நிலைகள்மீது பாகிஸ்தான் படைகள் மீண்டும் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றன.

# சிம்சன் தொழிலாளர்களின் உரிமைகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை

## ஒரு முற்போக்கு யூனியனின் வளர்ச்சியைத் தடுக்க முயற்சிப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது

### காட்டூர் கோபால் சார்பில் அளிக்கப்பட்ட விளக்கங்களை வேறு தொழிற்சங்கத் தலைவர்களும் மறுக்கவில்லை

### செய்தியாளரிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 8—

"சிம்சன் தொழிலாளர்கள் தகராறில் -- அசம்பாவிதமான சம்பவங்கள் எந்தத் தரப்பில் நடைபெற்றிருந்தாலும், பாரபட்சமின்றிப் போலீசார் நடவடிக்கை எடுப்பார்கள்.

"காட்டூர் கோபால் தலைமையில் இயங்கும் யூனியன் இப்போது செய்துகொண்டிருக்கின்ற ஒப்பந்தத்தினால் தொழிலாளர்களுடைய உரிமைகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை; இது சம்பந்தமாகக் காட்டூர் கோபால் சார்பில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களை, வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் ஆதாரபூர்வமாக மறுக்கவில்லை"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்; அமைச்சரவைக் கூட்டத்திற்குப்பிறகு, சிம்சன் தொழிலாளர் தகராறு -- மோதல்கள் குறித்துச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"சிம்சன் விவகாரம் என்ன ஆயிற்று?"

முதல்வர்:—"சிம்சனில் விவகாரமே இல்லை; இரு தரப்பிலும் உள்ளவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்; இருதரப்பிலும் சிலர் கைது செய்யப்பட்டு—பொறுப்பில் விடப்பட்டிருக்கிறார்கள்; இதில் எந்தவிதக் கட்சி மாறுபாடும் பார்க்கவில்லை.

"காட்டூர் கோபால் தலைமையில் உள்ள யூனியன் வளருவது தான் இவ்வளவு பெரிய எதிர்ப்புக்குக் காரணம் என்பதை அறிய வருந்துகிறேன்; ஒரு முற்போக்கு யூனியன் வளர்ச்சியைத் தடுக்க எல்லாவிதமான கட்சிகளும் கூட்டணி அமைத்திருப்பதும் அறிக்கைகள் விடுவதும் வேதனையாக இருக்கிறது."

### மதுரை மின்சார வாரிய ஊழியர்களுக்குக் கோரிக்கை

ஊதியப் பிரச்சினை மதுரையில் உள்ள மின்சார வாரிய ஊழியர்கள், நவ. 9-ந்தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர். அந்தத் தொழிலாளர்களை, உள்ளாட்சித் துறை அமைச்சரும் -- தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் அழைத்துப் பேசவிருப்பதால், 9-ந்தேதி வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

### தமிழ் மூலம் படிப்பவர்களுக்கு ரூ. 150 ஊக்கப் பணம்

தமிழ்ப் பயிற்று மொழி படிப்பவர்களுக்கு ரூ. 150 ஊக்கப் பணம் கொடுக்கப்படுகிறது; ஏற்கனவே அரசாங்க 'ஸ்காலர்ஷிப்'புகள் (உதவிப் பணம்) பெற்றுப் பட்டப் படிப்புப் படிக்கின்றவர்கள். தமிழ்ப் பயிற்று மொழி மூலம் படிக்க முன்வந்தால், அப்படிப்பட்டவர்களுக்கும் இந்த ரூ. 150, 'ஊக்கப் பணம்' என்ற முறையில் கொடுக்கப்படும்."

### புதிய வரிகள் நிலை?

செய்தியாளர்:—"புதிய வரிகள் பற்றி முடிவாகிவிட்டதா?"

முதல்வர்:— "வங்காள தேசப் பிரச்சினை காரணமாகத் தற்காலிக வரிகள் விதிப்பது எல்லாம், நான் வெளிநாடு போய்விட்டு வந்த பிறகுதான்."

கேள்வி:—"புதிய வரிகள் பற்றி இன்றையக் கூட்டத்தில் பேசப்பட்டதா?"

முதல்வர்:—"அந்தப் புதிய வரிகள் பற்றி யோசிப்பதே, வெளிநாடு போய்விட்டு வந்த பிறகுதான்."

கேள்வி:—"அப்படியானால், இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது?"

முதல்வர்:— "நான் வெளிநாடு போவது பற்றியும், இங்கு பார்க்கவேண்டிய காரியங்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டன."

### அமைச்சரவைக் கூட்டங்கள்

கேள்வி:—"15 நாட்களுக்கு ஒரு முறை அமைச்சரவை கூட வேண்டும் --- என்று இருக்கிறதே -- அப்படியானால், நீங் வெளிநாட்டில் இருக்கும்போது அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது யார்?"

முதல்வர்:—"நான் முன்பு 20 நாள் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த சமயத்தில் எவ்வாறு நடந்ததோ--அப்படி ஏற்கனவே நடந்த முறையில்தான் இப்போதும் நடக்கும்."

### அரசு பஸ்களுக்குத் தனி வாரியப் பிரச்சினை

கேள்வி:—"சென்னை நகரில் அரசாங்கப் பஸ்களுக்குத் தனி வாரியம் ஏற்படுத்தும் பிரச்சினை என்ன ஆயிற்று?"

முதல்வர்:—"அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டுவிட்டது; 'பைல்'கள் அதிகாரிகளால் வரிசையாக கவனிக்கப்பட்டு வருகிறது."

## அமைச்சர் சத்தியவாணிமுத்து பயணம் ஒத்திவைப்பு

### அந்தமானில் வெள்ளம் ஏற்பட்டதன் விளைவு

சென்னை, நவ. 6—

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களை நேரில் கண்டறிந்து வருவதற்காக அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், ஞாயிறன்று அந்தமான் தீவுக்குச் சென்று வருவதாக இருந்தது.

அந்தமானில் இப்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதன் காரணமாகத் தம்முடைய சுற்றுப் பயணத் திட்டத்தை ஒரு வார காலத்திற்குத் தள்ளிவைத்திருப்பதாக அவர், செய்தியாளர்களிடம் கூறினர்.

## காவிரி நீர் வழக்கு

### பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்ற ஆணை

புதுடில்லி, நவ. 6—

காவிரி நீர்ப் பங்கீட்டுத் தகராறு தொடர்பாகத் தலைமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில், பிரதிவாதிகள், நான்கு வார காலத்தில் தங்கள் பதில்களைத் தாக்கல் செய்ய வேண்டும் -- தலைமை நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

# சரித்திரம் காணாத நல்லரசு

## தந்தை பெரியார் பெருமிதம்

### கழக ஆட்சி நீடித்து நிலைக்க நாட்டு மக்களுக்கு வேண்டுகோள்

சேலம், நவ. 6—

"இதுவரையில் எந்த அரசும் செய்யாத சாதனைகளைக் கழக அரசு செய்துவருகிறது.

"இந்த அரசு, இன்னும் 15-ஆண்டுக் காலத்திற்காவது தொடர்ந்து இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

"தைரியமாகவும் -- துணிச்சலாகவும் நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

"இப்படிப்பட்ட நல்ல அரசு இருந்ததாக எந்தச் சரித்திரத்திலும் -- எந்தப் புராணத்திலும் காணக் கிடைக்கவில்லை!

"நம்முடைய வாழ்நாள், கழக ஆட்சிக்காக இருக்கவேண்டும் -- அவ்வளவுதான்; இந்த ஆட்சி என்றைக்கும் இருக்கும்படியான அளவிலே நாம் நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்; இதிலே நாம் ஏமாந்துபோகக்கூடாது; நாட்டை முன்னேற்றமடையச் செய்ய இதுதான் சரியான நேரம் -- இதுதான் சரியான, முறையான ஆட்சியாகும்.

"ஆகவே, இந்த அரசு யாராலும் அழிக்கப்படாமல் காப்பாற்றப்படவேண்டியது தமிழ் மக்களின் இன்றியமையாக் கடமையாகும்."

—சேலம் பாராட்டு விழாவில்

# புதுயுகம் பிறந்துவிட்டது

## புதிய தேவைகளை ஏற்படுத்தும் சிந்தனைகள் தேவை

### மாற்றப்படக்கூடாதது அல்ல-- அரசியல் சட்டம்

பெருந்துறை, நவ. 6—

"ஆண்டாண்டுக் காலமாக நாம் அடிமைகளாக இருப்பதற்குக் காரணம், 'ஆண்டவன் தலையில் அப்படி எழுதிவைத்திருக்கிறான்' என்று -- ஆண்டவன்மீது பழியைப் போட்டுத் தம்மைத் தாமே நொந்துகொண்டு வாழ்வில் தேய்ந்து போகிறார்கள்; இது ஒரு நிலை!

"அடுத்து, 'அவன் அப்படித்தான் வாழவேண்டும் -- தேயவேண்டும்' என்று பிரம்மா அவன் தலையில் அன்றைக்கே எழுதிவிட்டான்; ஆகவே, சாக்கடை ஓரத்தில் புழுப்போல நெளியவேண்டியதுதான -- தெருக் கோடியில் படுத்துறங்கவேண்டியதுதான்; முழத் துணியைக் கட்டிக்கொண்டு உடலுக்குச் சட்டையின்றி உலவவேண்டியதுதான்' என்று சொன்னார்களே -- அது அந்தக் காலம்!

"பிரம்மா எழுதிய எழுத்தானாலும் -- அவன் பாட்டன் எழுதிய எழுத்தானாலும், அதை அடியோடு மாற்றிப் புதிய எழுத்தை எழுதும் புதிய யுகம்தான் இன்று பிறந்துள்ளது; அப்படிப் புதிய தேவையான முறையை ஏற்படுத்தும் சிந்தனைதான், இன்றைய அரசியல்வாதிக்கு இருக்கவேண்டும்.

"அரசியல் சட்டத்தை இன்று நாடாளுமன்றத்தில் திருத்துகிறோம் என்றால், காரணம் என்ன? அரசியல் சட்டம் சாதாரணமானவர்களால் எழுதப்பட்டதா? அம்பேத்காரும் -- அல்லாடிகளும் -- அப்படிப்பட்ட மேதாவிகளும் கூடி யாத்ததுதான் அரசியல் சட்டம்!

"ஆனால் அரசியல் சட்டம் -- மத்திய அரசின் சட்ட அமைச்சர் நாடாளுமன்றத்தில் பேசியதைப்போல் -- யாராலும் மாற்றமுடியாத மனுஸ்மிருதியல்ல; அரசியல் சட்டம் மாற்றப்படவேண்டிய ஒன்றேயாகும்; சட்டம், மக்களுக்காகத்தான்; சட்டம் வந்த பிறகு அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டியவர்கள் மக்கள்; அதுதான் நியதி; ஆகவே, சட்டம் என்பது மாற்றவே முடியாத ஒன்றல்ல!

"காலத்திற்கேற்பச் சட்டங்கள் மாற்றப்படவேண்டும்; அப்படி மாற்றப்பட்டால்தான், தேசியமயக் கொள்கை வெற்றியடைய முடியும்.

"நிலங்களை ஒரு சிலர் தங்கள் வயப்படுத்திக்கொண்டு, 'அதோ பார்; கண்ணுக்கு எட்டியவரையுள்ள கழனிகளெல்லாம் என்னுடையவை -- என் பேரன் பேத்திக்குச் சொந்தமானவை -- வயிற்றிலே வளரும் பிள்ளைக்குச் சொந்தமானவை' என்று உரிமை கொண்டாடிக்கொண்டிருந்தால், அந்த உரிமை ஒட்ட நறுக்கப்படவேண்டும்; அதற்கேற்ப அரசியல் சட்டத்தில் திருத்தம் வந்தாக வேண்டும்.

"அதையொட்டித்தான், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவந்துள்ளார்; அதை நமது சட்டமன்றத்திலும் அங்கீகரித்திருக்கிறோம்.

"'ஐயோ -- அடிப்படை உரிமைகளில் கை வைக்கிறார்களே? -- இது ஆபத்தில் கொண்டுபோய் விடாதா? கை வைக்கலாமா? நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் கருணாநிதியால் பேச முடியுமா? பேச்சுரிமை இருக்குமா? கட்சி நடத்துகிற உரிமை இருக்குமா? சங்கம் -- யூனியன் நடத்த முடியுமா? -- என்றெல்லாம் கேட்டனர்.

"இன்று அடிப்படை உரிமைகளில் சில திருத்தங்கள் செய்து நாடாளுமன்றத்திற்கு நாம் உரிமைகளைக் கொடுத்திருக்கிறோம் என்றால், அது, டாக்டரிடம இருக்கும் ஆப்ரேஷன் கத்தியைப் போன்றதுதான்; அதனால்தான், நம்பிக்கையோடு தந்திருக்கிறோம்!"

-- முதலமைச்சர் கருணாநிதி

(பெருந்துறைக் கூட்டத்தில்)

# பூம்புகார் பெறும் புதிய சிறப்பு

## வடிக்கும் சிலை மூலம் சிலப்பதிகாரம் படிக்கலாம்

### உலகிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் அமையும் கலைக்கூடம்

சென்னை, நவ. 8—

"சிலப்பதிகாரத்தைப் படிக்காமலே தெரிந்துகொள்ளும் வகையில், காப்பியத்தின் முக்கிய நிகழ்ச்சிகளைச் சிற்பங்களாக அமைத்துக் காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகாரில்) அமையும் கலைக்கூடத்தில் வைக்கப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று சென்னைக் கடற்கரையிலுள்ள அண்ணா சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோ அடிகளின் சிலை திறப்பு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்; இதன் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது :—

"சிலப்பதிகாரம் நடந்த காவிரிப் பூம்பட்டினம் இப்போது கடலில் அமிழ்ந்துபோய் சிதைந்து கிடக்கிறது.

"இங்கு கிடைக்கும் புதைப் பொருட்களும், ரோம் - கிரேக்க நாணயங்களும், பண்டைய நாளில் காவிரிப்பூம்பட்டினம் இருந்த சிறப்பை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது!

"அங்கு சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைக்கும் பணி இப்போது வேகவேகமாக நடைபெற்று வருகிறது; இங்கு, கண்ணகி மணக்கோலம் கொண்டது — போர்க்கோலம் பூண்டது ஆகிய காட்சிகளுடன், கண்ணகிக்குச் சிலை அமைக்கச் சேரன் செங்குட்டுவன் இமயம் வரை சென்று கனக — விசயர் தலையில் கல் ஏற்றிவந்த காட்சிகளும் இடம் பெறும்.

"சிலைகளின்மூலம் கதை சொல்லும் மண்டபமாக இது அமையும்; உலகிலேயே இப்படி சிலைகள் மூலம் கதை சொல்லும் மண்டபம் தமிழகத்தில்தான்— இந்த அரசில்தான் அமைகிறது. இந்த கலைக்கூடம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என்று கருதுகிறேன்.

இந்தப் பணி முற்றுப் பெற்றுவிட்டால், வெளிநாட்டிலிருந்து இங்கு வருபவர்கள், சிலப்பதிகாரத்தைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது — பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவிந்தராசன் என்பவர், 'கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் சிலை வைத்த இடம், மதுரை மாவட்டத்தில் உள்ள சுருளிமலையாகத்தான் இருக்கும்; என்று கண்டுபிடித்திருக்கிறார்; இந்த இடத்துக்கு ஒரு மைல் தூரத்தில் கேரளத்தின் எல்லை இருக்கிறது.

இந்த இடத்தில் உள்ள ஒரு உயர்ந்த பகுதியில் மங்கள தேவி கோவில் இருக்கிறது; இங்கு உள்ள சிலை, காளி — துர்க்கை — பார்வதி போன்ற சிலைகளைப் போல் நான்கு கைகள் உடையதாக இல்லாமல், சாதாரணப் பெண்ணைப் போல இரண்டு கையுடன் இருக்கிறது; மேலும், இந்தச் சிலையின் கல் அந்தப் பகுதியில் கிடைக்கும் கல்லிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கல்லாக இருப்பதுடன், இமயமலைப் பகுதியில் கிடைக்கும் கல்லுடன் தொடர்பு கொண்டதாகவும் இருக்கிறது.

எனவே, இந்தப் பகுதியில் தமிழ்நாட்டுத் தொல்பொருள் நிபுணர்கள் ஆராய்ச்சி நடத்த வழிவகை செய்யவேண்டும் என்று நாங்கள் கேரள முதலமைச்சர் அச்சுத மேனனுக்குக் கடிதம் எழுதினோம்; அதற்கு அவரிடமிருந்து வந்த பதிலில், 'நாங்களும் இந்தப் பகுதியில் ஆராய்ச்சி நடத்துகிறோம்; தமிழகத் தொல்பொருள் துறை ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி நடத்த இடமளிக்கும் வகையில் — அதன் தொடர்பாக உங்களுக்குப் பதில் அனுப்புகிறோம்' என்று கூறியிருக்கிறார்; அவரிடமிருந்து நல்ல பதில் கிடைக்குமானால், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு எந்தச் சிலையை வைத்தானோ — அந்தச் சிலையைக் காணும் நாள் வெகு தூரத்தில் இருக்காது."

[illegible] முன்னேற்றம், மழகத்திற்காக [illegible] எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-16) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

## எங்கு சென்றாலும் என் இதயம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரையில் — அண்ணா சதுக்கத்தில் இளங்கோ அடிகள் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில், முதலமைச்சர் கலைஞர் கூறியதாவது:—

'உங்கள் அன்பான ஆசியுடன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்கிறேன்.

"நான் இல்லாத நேரத்திலும் தமிழ்நாட்டின் அமைதியைக் கட்டிக்காக்க வேண்டும் என்று அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழர்களின் பண்பையும் தொடர்ந்து பேணிக்காக்க வேண்டும் என்று உங்களை அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

"நமது நாடு இப்போது மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறது; நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா உதவிகளையும் நீங்கள் செய்வீர்கள் என நம்புகிறேன்.

"நான் வெளிநாடு சென்றுவர விடை கொடுக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

"நல்ல உள்ளங்களின் வாழ்த்துக்களுடன் விடைபெற்று மேலை நாடு சென்று திரும்புகிறேன்."

### வழியனுப்பு விழா — சிறப்பான ஏற்பாடுகள்

நெஞ்சம் நிறைந்த உவகையுடன் தமிழகம், கலைஞரை இன்று வழியனுப்பி வைக்கிறது.

தமிழ்ப் பண்பாட்டின் தனிப் பெரும் தூதுவராகச் செல்லும் அவருக்குச் சென்னையில் மட்டுமன்றி பம்பாயிலும் சிறப்பாக வழியனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வழியனுப்பி வைக்கும் விழாவில், அமைச்சர்கள் — அதிகாரிகள் — முக்கியப் பிரமுகர்கள் — மாணவர்கள் — தொழிலாளர்கள் — கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

தமது இல்லத்திலிருந்து கலைஞர் அவர்கள் கார்மூலம் மீனம்பாக்கம் செல்கிறார்; அவர் செல்லும் வழிகளில் எல்லாம் கழகக் கொடிகளாலும் — தோரணங்களாலும் சிறப்பான அலங்காரங்களைக் கழகத் தோழர்கள் செய்திருக்கின்றனர்.

சைதை மர்மலாங் பாலத்திற்கு அருகில் கலைஞர் அவர்கட்கு யானை ஒன்று மலர் மாலை அணிவிக்கும்; அதுபோது வெண்புறுக்கள் பறக்கவிடப்படும்.

சைதைப் பகுதித் தோழர்கள் சார்பில் கிண்டி இரயிலடிக்கு அருகிலும் — சின்னமலை அருகிலும்கூட எழில்மிகு வழியனுப்பு விழா நடைபெறும்; இந்த ஏற்பாடுகளை சைதைப் பகுதி தி. மு. கழகத்துடன்— அப்பகுதி மாநகராட்சி உறுப்பினர்களும் சேர்ந்து செய்துள்ளனர்.

கலைஞர் அவர்கள் மர்மலாங் பாலத்தை அடைவதற்குமுன், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி அருகே மாதிரி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிறப்புமிகு வழியனுப்பு நடத்துகின்றனர்; மாணவர்களோடு ஆசிரியர்களும் — ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியினரும் இணைந்திருப்பர்.

இதேபோல், ஆலந்தூர் — சத்திபாரா ஆகிய இடங்களில் செங்கற்பட்டு மாவட்டத் தோழர்களின் பொலிவு மிகு வழியனுப்பு நடைபெறும்.

கலைஞர் அவர்கள் விமான நிலையத்தை அடைந்ததும், அங்கே தனி மேடையில் அவருக்குப் பல்வேறு மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் சார்பில் கைத்தறி ஆடைகளும் — மலர் மாலைகளும் அணிவிக்கப்படும்.

நல்ல உள்ளங்களின் வாழ்த்துக்களுடன் கலைஞர் அவர்கள், சென்னையிலிருந்து புறப்பட்டு இரவு 8-மணியளவில் பம்பாய் சேருகிறார்.

### பம்பாயில் :

பம்பாய் தி. மு. கழகத்தின் சார்பில் விமான நிலையத்திலிருந்து மான்கூர்டு பகுதியிலுள்ள ஜனதா காலனிக்குக் கலைஞர் அழைத்துச் செல்லப்படுகிறார்; அங்கு பம்பாய் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் வழியனுப்பு விழாவில் கலந்துகொண்டு கலைஞர் நன்றியுரை ஆற்றுவார்.

கூட்டம் முடிந்ததும், சிறிதுநேர ஓய்வுக்குப்பின், நள்ளிரவு ஒரு மணியளவில் அமெரிக்கப் பயணத்தைத் தொடருவார்.

# அரசு ஊழியர்களின் பொறுப்பற்ற செயல்

## கேரள முதல்வர் அச்சுதமேனன் கண்டிப்பான எச்சரிக்கை

### 'வேலைநிறுத்தம் வேறு வேண்டுமா' என இடித்துரை

திருவனந்தபுரம், நவ. 8—

அரசு ஊழியர்களுக்கு இருக்கவேண்டிய கடமையையும் கட்டுப்பாட்டையும் கவனப்படுத்தி, கேரள முதலமைச்சர் அச்சுத மேனன் அறிவுறுத்தி யிருக்கிறார்; தற்போது அரசு ஊழியர் செயல்படும் முறை பற்றி அவர் கூறிதாவது :—

"அலுவலகத்தில் மிகக் குறைவான பணிகளையே அவர்கள் செய்கின்றனர்.

அலுவலக நேரங்களில் தத்தம் இருக்கைகளில் அவர்களைக் காணப்படுவதில்லை. பெரும்பாலும் காண்டீனிலேயே இருந்துவிடுகிறார்கள்.

தலைமைச் செயலகத்தில் அவர்கள் சீட்டு விளையாடிக்கொண்டிருந்ததாகக் கூட கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் வேலைநிறுத்தத்தில் வேறு ஈடுபடுகிறார்கள்; இவர்களின் வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் தரப்பட்டால், அது, பொதுமக்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதற்கு ஊதியம் தருவதற்கு ஒப்பாகும்; ஆகவே, வேலைநிறுத்த யோசனைக்கு அரசு ஊழியர்கள் செவிசாய்க்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்."

அடுத்த புதனன்று இடது கம்யூனிஸ்டுக் கட்சி வேலைநிறுத்தம் செய்யவேண்டுமென்று அறிவித்திருக்கிறது. அன்றையத் தினம் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காது என்றும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

## முதலமைச்சர் இலாகாக்கள் பிரிவினை விவரம்

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்வதையொட்டி, அவர் மேற்கொண்டிருந்த இலாகாக்கள் அமைச்சர்களுக்குக் கீழ்க்கண்டவாறு பிரித்தளிக்கப்பட்டிருக்கிறது:—

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன்:— பொது, பொது நிர்வாகம், ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், போலீசு.

நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் :—நிதி.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் :—இளைஞர் அணி.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து :—திட்டம்.

உணவுத் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் :—செய்தி, விளம்பரத் துறை.

தொழில்துறை அமைச்சர் செ. மாதவன் :—மதுவிலக்கு, கலால் வரி, மாவட்ட ரெவினியூ அதிகாரிகள் குறித்த அலுவல்கள்.

பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா :— குடிநீர் வாரியம்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் :—திரைப்படச் சட்டம்.

வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் :—தேர்தல்கள்.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் :—குடிசை மாற்று வாரியம்.

மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் :—திரைப்படக் கலை நுண்திறன்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் :— பயண அனுமதிச் சீட்டுகள்.

அறநிலையத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன் :—பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சாமான்கள் விலைவாசி வினியோகச் சட்டம்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

## ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

நவ 9 காலை 7-35 மணி கோவை; 10-மணி: சோலையார் 2—தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டம்; மதியம் 12 மணி: சோலையார் 1—தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; மாலை 3-மணி: மேல் ஆழியார்—தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; 6 மணி: மின்பாறை—கணக்காயர் சங்கம் பொதுக்கூட்டம்.

நவ. 10 காலை 9-மணி: பொள்ளாச்சி—வழக்கறிஞர் பழனிசாமி அவர்கள் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; மாலை 4-மணி: கோவையில் பொதுப் பணித் துறைப் பொறியாளர் கழக வரவேற்பு; 6-மணி: பொள்ளாச்சி —நாடாளுமன்றத் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

# தமிழக அரசின் முயற்சி வெற்றி

## தீவுத் திடலில் கட்டடம் கட்டும் திட்டம் கைவிடப்பட்டது

### திறந்தவெளியாகத் தொடர்ந்து நீடிக்கும்— மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் உறுதி

சென்னை, நவ. 8—

சென்னை தீவுத் திடலில், பாதுகாப்புத் துறைக்காகப் பல மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்படும் திட்டத்தைக் கைவிட்டுவிடுவதாகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெகசீவன்ராம் அறிவித்திருக்கிறார்.

இந்தத் தீவுத் திடல் திறந்த வெளிப் பகுதியாகவே இருக்க வேண்டுமென்றும் கட்டடங்கள் கட்டாமலிருக்குமாறும் நீண்ட காலமாகவே தமிழக அரசு மத்திய அரசிடம் கோரிவந்திருந்தது.

திட்டத்தைக் கைவிட மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக அறிவித்த தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள், தமிழக அரசின் முயற்சி வெற்றிபெற்றிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

தீவுத் திடலில் கட்டப்படவிருந்த கட்டடத்திற்கு, வேறு இடம் ஒன்று ஒதுக்கித் தருவதாக தமிழக அரசு தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் இராசாராம் தெரிவித்தார்.

தீவுத் திடலில் நீர் ஊற்று ஒன்றை அமைத்து, அந்த இடத்தைக் கவர்ச்சிகரமாக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அறிவித்தார்.